★

Registered as a Newspaper in Ceylon | விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 | EELA NADU | இதழ் 45

National Tamil Daily | தேசிய தினசரி

குரோதி பங்குனி 14 துல்கஃ பிறை 23 (27 3 65) சனிக்கிழமை


## 10 சதம் தான்!

வாசக நேயர்களுக்கு உடனுக்குடன் செய்திகளைத் தெரிவிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் பல பதிப்புக்களை அவசர அவசரமாக வெளியிட்டோம். வாசக நேயர்கள் பலர் அதிகாலையிலிருந்தே 'ஈழநாடு' காரியாலயத்தின் முன் வீதியில் குழுமி நின்று விசேஷ பதிப்புகளுக்காக காத்திருந்தனர். பலர் தொலைபேசியில் விசேஷ பதிப்பு வெளிவருகிறதா? என்று விசாரித்த வண்ணமிருந்தனர். வாசக நேயர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக சிரமங்களைப் பொருட்படுத்தாமல் பல பதிப்புக்களை வெளியிட்டோம். நேயர்கள் காட்டிய ஆதரவைக் கண்டு மகிழ்ந்தோம். ஆனால் பத்திரிகை விற்றவர்கள் சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் அடித்ததாக சில அன்பர்கள் புகார் செய்துள்ளனர். இதை அறிந்து வருந்துகிறோம். 'ஈழநாடு' பத்திரிகை ஒன்று 25 சதமாகவும் 50 சதமாகவும் கூட வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக மற்றும் சிலர் தெரிவித்தனர். நமது பத்திரிகை விற்பனையாளர்கள் இவ்விதம் செய்திருப்பார்களென நாம் எண்ணவில்லை என்றாலும் இப்புகார் பற்றி விசாரணை செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவுசெய்துள்ளோம்.

இதேசமயம் எந்தக் காரணங்கொண்டும் 'ஈழநாடு' பத்திரிகையில் குறிப்பிட்ட விலைக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டாமென்று வாசக நேயர்களைக் கேட்டுக்கொள்கிறோம். 'ஈழநாடு' தனிப் பிரதி விலை 10 சதம் தான். வாசக நேயர்கள் இவ்வித கஷ்டங்களுக்குள்ளாகாமல் இருப்பதற்கு ஒரு சிறு யோசனை கூற விரும்புகிறோம். அதாவது உங்கள் பிரதிகளுக்கு உங்கள் பகுதி பத்திரிகை விற்பனையாளரிடம் முன்கூட்டியே ஒழுங்கு செய்துகொள்ளுங்கள் அல்லது சந்தா கட்டிவிடுங்கள்.

# சதிவழக்கு: மேலும் மூவர் விடுதலை

## மேஜர்கள் ஜோசப், வைட், லொயல்லா வீடு திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

புரட்சி சதிவழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களில் மேலும் மூவர் இன்று விடுதலை செய்யப்பட்டனர். மேஜர்லொயல்லா, மேஜர்வைட், மேஜர்ஜோசேப் ஆகிய மூவருமே விடுதலையடைந்தவர்களாவர்.

கொழும்பு பிளாக் ஸ்டார்ப் வீதியிலுள்ள அட்மிரல் கோர்ட் கட்டிடத்தில் பிரதம நீதியரசர் திரு. சன்சோனி, நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ, நீதியரசர் திரு. எல். பி. டி. சில்வா ஆகியோர் முன்னிலையில் இன்று காலை புரட்சிச்சதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு முன்பாக நேற்று முன்தினமும் பிரதிவாதிகள் அனைவரினதும் சார்பிலும் ஆஜரான திரு எச். டபிள்யு ஜயவர்த்தன கியூ. ஸி. ந்தொகுப்புரை நிகழ்த்தினர்.

இன்று காலை நீதிமன்றம் கூடியதும் பிரதம நீதியரசர் மேஜர்லொயல்லா மேஜர்வைட் மேசர் ஜோசப் ஆகியமூன்றுபிரதிவாதிகளையும்பார்த்து, "உங்களை விடுதலை செய்கிறோம் நீங்கள் போகலாம்" என்று கூறினர். மூன்று பிரதிவாதிகள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லையென்றும் அவர்களை விடுதலைசெய்வதெனத் தாங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளதாகவும் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

இதர பிரதிவாதிகள் பற்றி ஏப்ரல் 6-ந் திகதி மீண்டும் நீதிமன்றம் கூடும்பொழுது ஆலோசனை செய்யப்படும் என்றும் பிரதம நீதியரசர் அறிவித்தார்.

## 'ஈழநாடு' துரயநிதி

'ஈழநாடு' குருவெளிகஷ்டநிவாரண நிதிக்கு நேற்றுப் பிற்பகல் கலஸ் தூரியார் வீதி, இரத்தினசிங்கம் என்ற அன்பர் வழங்கிய 5 ரூபாயுடன் இதுவரை பணமாகவும் பொருளாகவும் 27681 ரூபாய் 67 சதம் சேர்ந்துள்ளது.

# மந்திரிசபை இன்று பதவியேற்கும்

## தமிழரசைச்சேர்க்க மீண்டும் முயற்சி

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

திரு. டட்லி சேனநாயகா அமைத்துள்ள தேசிய மந்திரிசபை நாளை சனிக்கிழமை முற்பகலில் ராணி மாளிகையில் கவர்னர் ஜெனரல் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் செய்து பதவியேற்கும்.



தமிழரசுக் கட்சியினருக்கு இரண்டு மந்திரிப் பதவிகளும் நான்கு பார்லிமெண்டரிக் காரியதரிசி பதவிகளும் வழங்கப்பட்டதாகவும் ஆனால் இப்பதவிகளை ஏற்க அவர்கள் மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது. ஆனால் மந்திரிசபையில் தமிழரசுக்கட்சியும் இடம்பெற வேண்டியது அவசியமெனவும் பதவிகளை ஏற்றுக்கொள்ளுமாறும் தமிழரசுக்கட்சித்தலைவர்களை திரு. டட்லியும் அவரது நண்பர்களும் வற்புறுத்தி வருவதாகவும் தமிழரசுக்கட்சி மந்திரிசபையில் சேர்ந்தால்தான் தாமும் சேரமுடியுமென்று தமிழ்க்காங்கிரஸ் தலைவர் கூறியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

கொழும்பு வடக்குத்தொகுதி எம். பி. திரு. வி. ஏ. சுகததாசவுக்கும் ஒரு மந்திரிப் பதவி அளிக்கப்படக்கூடுமென்றும் அறியப்படுகிறது.

## இலங்கைக்கு மீண்டும் அமெரிக்க உதவி?

வாஷிங்டன், மார்ச் 26

இலங்கைக்கு மீண்டும் உதவி அளிப்பதுபற்றி அமெரிக்க அரசாங்கம் ஆலோசனைசெய்யும் என்று வாஷிங்டனில் ராஜாங்க இலாகா இன்று தெரிவித்தது.

இலங்கையிலுள்ள அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பது சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதும் இலங்கைக்கு மீண்டும் உதவி அளிப்பதுபற்றி அமெரிக்கா ஆலோசனை செய்யும் என்று ராஜாங்க இலாகா அதிகாரியொருவர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளின் நஷ்டஈட்டுத் தகராறு பற்றி இலங்கையின் புதிய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நன்கறிவார் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலுள்ள எண்ணெய்க் கம்பனிகளின் எண்ணெய் விநியோக உரிமையை இலங்கை அரசாங்கம் அரசாங்க உரிமையாக்கிக் கொண்டதைத் தொடர்ந்து அந்தக் கம்பனிகள் நஷ்டஈடு கோரின. நஷ்டஈடு சம்பந்தமாக தகராறு ஏற்படவே அமெரிக்கா தான் அளித்து வந்த உதவியை நிறுத்திக் கொண்டது.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

முதலாவது பரிசு
08 B 0979 ரூ. 28,120

இரண்டாவது பரிசு
07 T 0419 ரூ. 8,085

மூன்றாவது பரிசு
08 M 0440 ரூ 4,015

(2-ம் பக்கம் பார்க்க)

★

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றிழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
05 D 0862 ரூ. 16,000

இரண்டாவது பரிசு
09 Z 0631 ரூ. 5,240

மூன்றாவது பரிசு
04 O 0499 ரூ. 2,000

(2-ம் பக்கம் பார்க்க)

## பங்குனி உத்தரம்

கொள்ளாந்தை, வெள்ளி

கொஸ்லாந்தை, மீரியவத்தை, மொனராகலை ஆகிய தோட்டங்களில் உள்ள முருகன்சந்நிதானங்களில் பங்குனி உத்தரவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது.

மீரிய வத்தையில் இளைஞர் முன்னேற்ற மன்றம் ஏற்பாடு செய்த நாடகவிழாவில் தோட்ட மனேஜர் திரு ஆர் எம் ஹிப்பன் கலந்துகொண்டார். 'முருகன்' என்ற நாடகமும் நடைபெற்றது.

## பிரிட்டிஷ் பத்திரிகை கருத்து

லண்டன், மார்ச் 25

'இலங்கையின் ஜனநாயக முறை சம்பந்தமாக இலங்கை பாராட்டப்பட வேண்டும்' என லண்டனிலிருந்து வெளிவரும் 'லண்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

இம்முறை இடம்பெற்ற தேர்தலின் திருமதி பண்டாரநாயகாவின் சுதந்திரக்கட்சி தோல்வியுற்றது சம்பந்தமாக எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு. என். பி. ஸ்திரமான ஒரு அரசாங்கத்தை அமைக்க வேண்டுமானால் தமிழரசுக் கட்சியின் 14 அங்கத்தவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

### தேர்தலுக்குமறுநாள்

## பஸ் சேவை நடைபெறவில்லை

கம்புறுப்பிட்டிய, வெள்ளி

தேர்தல் நடந்த மறுநாள் மாத்தறைக்கும் கம்புறுப்பிட்டியாவிற்கும் வழமைபோல் நடைபெறும் பஸ் சேவைகள் நடைபெறாது சீர்குலைந்திருந்தன.

பல சாரதிகள் அன்று வேலைக்கு வராததுதான் காரணம் என்று இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்


உங்கள் கட்டிடங்கள்

உறுதியாக இருப்பதற்கு

தரமான

★ இரும்புச் சாமான்களும்

★ பெயின்டுவகைகளும்

★ அஸ்பஸ் சீட்டுகளும்

★ மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

வல்வெட்டித்துறை

மணிவாக்கு

ஜனநாயக ஆட்சியை நடத்துவோர் முற்றிலும் சுயநலமற்றவராக இருத்தல் வேண்டும். தங்கள் சொந்த அல்லது கட்சி நன்மையை நினையாமல் ஜனநாயகத்தின் நன்மையையே கருத வேண்டும்.

— மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 14 உ. (27-3-65)


## தமிழருக்கு மந்திரி பதவி

திரு. டட்லி சேனநாயகாவின் மந்திரிசபையில் இரு தமிழர்களும் இடம் பெற்றுள்ளனர். இன்றைய நிலையில் தமிழர்கள் மந்திரிபதவியை ஏற்றுக் கொள்ளலாமா?

1956-ம் ஆண்டு முதல் இது வரை ஆட்சி புரிந்த அரசாங்கத்தில் தமிழர் எவரும் மந்திரி பதவி வகிக்கவில்லை. இதற்கு அந்த அரசாங்கங்கள் தமிழ் மொழிக்கு சரியான இடமளிக்க மறுத்ததுடன் தமிழ் மக்கள் விஷயத்தில் பாகுபாடு காட்டியும் வந்தன. 1956-ம் ஆண்டுக்கு முன் ஆட்சி பீடத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் தமிழர்களும் பொறுப்புள்ள மந்திரி பதவிகள் வகித்தனர். அப்பொழுது அந்த அரசாங்கம் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமஅந்தஸ்து அளித்திருந்தது. துரதிர்ஷ்ட வசமாக அந்த கட்சி சமஅந்தஸ்துக் கொள்கையைக் கைவிட்டு களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டும்' கொள்கையை ஏற்றுக் கொண்டது. மந்திரி சபையிலிருந்த தமிழர்கள் பதவியைத் துறந்ததுடன் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்தும் வெளியேறினர். அன்று முதல் ஐக்கியமும், தேசியமும் நீங்கி கட்சிமட்டும்தான் மிஞ்சியது. இப்பொழுது மட்டும் அந்தக் கட்சி தனது 'சிங்களம் மட்டும்' கொள்கையை மாற்றிக் கொண்டு விட்டதா? என்ற கேள்வி எழலாம். சிங்களம் மட்டும் கொள்கையை அக்கட்சி மாற்றவில்லை, மாற்றிக் கொள்வதும் சுலபமல்ல. ஆனால் கடந்த கால சம்பவங்களிலிருந்தும் அரசியல் அனுபவங்களிலிருந்தும் தேசிய ஒற்றுமையின் அவசியத்தையும் தமிழரின் ஒத்துழைப்பின் அத்தியாவசியத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி நன்கு உணர்ந்திருக்க வேண்டும், அந்தக் கட்சிமட்டுமலாது "சிங்களம் மட்டும் தான் இந்நாட்டின் மொழி" என்று பிடிவாதமாகக் கூறி வந்த கட்சிகளும் அதன் தலைவர்களும்கூட உண்மை நிலையை உணர்ந்துவிட்டனர். அதனால்தான் திரு. டட்லி தலைமையில் "தேசிய அரசாங்கம்" அமைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல, தமிழர்களும் இந்நாட்டு மக்கள், அவர்களுக்கும் மற்றவர்களைப் போன்று உரிமை இருக்க வேண்டும்; அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றால்தான் நாடு முன்னேற முடியும் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர் இதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் இப்பொழுது ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் தக்க சான்று.

இதுவரை தென்னிலங்கையிலுள்ள கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் வெற்றி அளித்தனவா? தென்னிலங்கைத் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டனவா? என்று கேட்கப் படலாம். உண்மைதான் ஆனால் இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தைச் சரியாக அமுல் நடத்துவதற்கு தமிழ்த் தலைவர்களுக்கு இன்றுள்ள சந்தர்ப்பம் போன்று முன்னர் கிடைக்கவில்லை. திரு. டட்லியின் அழைப்பை ஏற்று மந்திரிசபையில் தமிழரும் அங்கம் வகித்தால் ஒப்பந்தத்தைச் சரிவர அமுல் நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். இது தவிர இதுவரை இருந்த அரசாங்கங்கள் தமிழ்ப் பகுதிகளையும் தமிழ் மக்களையும் புறக்கணித்ததன்மூலம் செய்த தீமைகளைச் சீர்செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். 'தேசிய அரசாங்கத்துக்கு' ஆதரவு கொடுக்கும் தமிழரசுக் கட்சியினர் மந்திரி சபைக்குள் நுழைவதால் தமிழ் பேசும் மக்களுக்குக் கெடுதி நேர்ந்துவிடாது. மாறாக அதிக நன்மையே கிடைக்க வழிபிறக்கும். இந்த அரசாங்கமும் வகுப்புவாத ரீதியில் செயலாற்றத் தொடங்குமானால் மந்திரி சபைக்கு வெளியிலிருந்தால் எப்படி ஆதரவை விலக்கிக் கொள்ள முடியுமோ அப்படியே மந்திரி சபையிலிருந்தாலும் பதவியை உதறித்தள்ளிவிட்டு வெளியேறிவிடலாம். அதில் சிரமமிருக்காது.

## யாழ். அரசாங்க லிகிதர் சங்கம்

### பிரதமருக்கு நல்லாசி

யாழ்ப்பாணம், வெள்ளி

நாட்டின் பிரதமராக திரு டட்லி சேனநாயக்கா பதவியேற்றதைத் தொடர்ந்து வட பகுதியிலிருந்து முதல்முதலாக யாழ்ப்பாணக் கிளை அரசாங்க லிகிதர் சங்கக் காரியதரிசி திரு. கே. பரமானந்தம் கீழ்க்கண்ட நல்லாசிகளை பிரதமருக்கு தந்தி மூலம் அனுப்பியுள்ளார்.

தந்தியின் விபரம் வருமாறு:

"அரசாங்கத்தின் தலைமைப் பீடத்தை ஏற்றுக்கொண்டதையிட்டு எங்கள் சங்கத்தின் சார்பில் எங்கள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றோம். உங்களுக்கு எங்கள் ஆதரவையும் ஒற்றுமையையும் கொடுக்குமிக்கருணத்தில் அரசாங்க ஊழியர்கள் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு சமூகமான வழிவகைகளைக்கையாளுவீர்கள் எனவும் எதிர்பார்க்கின்றோம்".

தங்களுடையஉரிமைகளையும் தேகரிக்கைகளையும் பதவிக்கு வரும் எந்த அரசாங்கத்திடமும் தாம் சமர்ப்பிப்பபோமென்றும் அது தங்கள் கடமை என்றும் சங்கக் காரியதரிசி நமது நிருபரிடம் தெரிவித்தார்

# "தமிழ் மொழிச்சட்டம் சரியாக அமுலாகும்"

## சிங்களக் கொள்கையில் மாற்றமில்லை; நடுநிலைமையே வெளிநாட்டுக் கொள்கை

### பிரதமர் டட்லி விளக்கம்

கொழும்பு, வெள்ளி

"சிங்களம் மட்டும் கொள்கையை மாற்றிக்கொள்ளும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. ஆனால் நியாயமான தமிழ்மொழி உபயோகச் சட்டம் ஒழுங்கான முறையில் அமுல் நடத்தப்படுவதை எமது அரசாங்கம் கவனித்துக்கொள்ளும்" என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா தெரிவித்துள்ளார்:

'ராய்ட்டர்' செய்திஸ்தாபன விசேஷ நிருபர் திரு. பீட்டர் ஜாக்ஸனுக்கு அளித்த பேட்டியிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினர்.

### எண்ணெய்க் கம்பனி நஷ்டஈடு

ஒரு கேள்விக்கு பிரதமர் திரு டட்லி பதிலளிக்கையில் "இலங்கையில் உள்ள அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் பிரச்னைபற்றி உடனடியாக ஆராய்ந்து அத்தகராறுக்கு மிக விரைவில் தீர்வுகாண விரும்புவதாகவும் கூறினர்.

### தனியார் துறை

மற்றொரு கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்கையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் தனியார்துறையில் அதிகம் அக்கறை செலுத்தவே தாங்கள் உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தார்.

### தொழில் தகராறுகள்

தொழில் தகராறுகள் குழப்பங்கள் ஏதாவது ஏற்படும் என்று எதிர்பார்க்கிறீர்களா? என்ற ஒரு கேள்விக்கு பிரதமர் டட்லி பதிலளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

எங்கள் மார்க்ஸீயவாதிகள் சிலர் குழப்பத்தைத் தூண்டிவிட்டு அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு முயற்சி செய்யக் கூடுமென்பது எனக்குத்தெரியும். ஆனால் எங்கள் அரசாங்கம் ஒரு தேசிய அரசாங்கம். எந்த நிலைமையையும் சமாளிக்கும் சக்தி எங்களுக்கு இருக்கிறதென்றே நினைக்கிறேன்.

### வெளிநாட்டு கொள்கை

வெளிநாட்டுக் கொள்கை பற்றி பிரதமர் திரு. டட்லி கூறியதாவது:-

இதற்குமுன் ஆட்சிபீடத்திலிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கம் ஒரு கோஷ்டி பக்கமாகவே அதிகம் சார்ந்திருந்தது. எங்கள் கொள்கை எந்த கோஷ்டியுடனும் சேராது எல்லோருடனும் நட்புறவுடனிருப்பதேயாகும்.

சீனவுடன் உங்கள் உறவு எப்படியிருக்கும் என்ற கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில் "நட்புறவுதான்" என்று பதிலளித்தார்.

### சீன உதவி

மற்றொரு கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்கையில் சீன உதவி நீடிக்குமெனத் தாம் கருதுவதாகக் கூறினர்.

### காமன்வெல்த் பிரதமர்கள்

கோடைகாலத்தில் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் தாம் கலந்துகொள்ளப்போவதாகவும் திரு. டட்லி சொன்னர்.

### பொருளாதார நெருக்கடி

இந்நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதுதான் தமது முக்கியமான வேலையென்றும் பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பது முதல் வேலையென்றும் பிரதமர் டட்லி கூறினர்.

## கைத்தொழில் குலுக்கல்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 100 ரூபாய் கொண்ட 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 11 D 0162 | 03 W 0908 | 16 Z 0011 |
| 03 T 0720 | 16 A 0759 | 11 L 0825 |
| 13 Y 0805 | 03 Z 0509 | 01 K 0658 |
| 04 H 0414 | 15 X 0123 | 10 U 0823 |
| 03 T 0055 | 11 Z 0064 | 14 X 0659 |
| 02 J 0688 | 07 A 0301 | 12 P 0312 |
| 06 T 0967 | 06 T 0542 | 08 A 0101 |
| 13 G 0385 | 03 S 0098 | 08 V 0601 |
| 04 X 0386 | 07 Q 0835 | 04 T 0143 |
| 06 W 0862 | 09 J 0658 | 15 R 0828 |
| 15 R 0168 | 09 Z 0568 | 08 B 0913 |
| 15 R 0300 | 07 R 0886 | 05 F 0576 |
| 09 M 0728 | 13 P 0985 | 10 F 0929 |
| 11 Y 0931 | 06 I 0563 | 02 C 0444 |
| 16 B 0558 | 16 R 0495 | 16 H 0831 |
| 02 G 0783 | 03 V 0552 | 03 Y 0102 |
| 15 J 0277 | 14 H 0439 | 02 U 0935 |
| 10 M 0117 | 01 K 0274 | 05 X 0147 |
| 02 Z 0907 | 02 X 0197 | 04 Z 0554 |
| 01 A 0050 | 04 M 0991 | 16 J 0950 |
| 13 C 0075 | 02 Y 0546 | 07 V 0643 |
| 02 G 0951 | 10 S 0858 | 08 K 0622 |
| 03 Y 0679 | 12 Z 0263 | 01 I 0222 |
| 06 Y 0035 | 07 M 0420 | 15 G 0182 |
| 08 K 0614 | 14 K 0111 | 04 B 0547 |
| 10 D 0802 | 03 Z 0274 | 05 K 0744 |
| 01 Q 0327 | 01 R 0321 | 01 E 0530 |
| 01 C 0112 | 13 A 0659 | 05 B 0566 |
| 04 Q 0260 | 15 A 0053 | 15 R 0314 |
| 01 T 0196 | 08 H 0511 | 02 X 0595 |
| 15 V 0419 | 07 T 0493 | 12 K 0014 |
| 11 R 0317 | 14 E 0171 | 15 Y 0531 |
| 12 V 0510 | 11 D 0386 | |
| 07 N 0125 | 14 B 0495 | |

## தேசிய குலுக்கல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 100 ரூபாய் பெறும் டிக்கட் விபரம்.

| | | |
|---|---|---|
| 05 O 0090 | 10 D 0073 | 01 X 0071 |
| 04 D 0627 | 04 M 0112 | 09 G 0544 |
| 06 Y 0896 | 03 L 0474 | 05 R 0365 |
| 05 D 0600 | 08 K 0843 | 10 Z 0539 |
| 08 N 0328 | 05 E 0855 | 06 X 0371 |
| 02 H 0391 | 05 D 0026 | 01 G 0072 |
| 07 V 0081 | 07 H 0740 | 02 M 0058 |
| 01 X 0318 | 01 P 0755 | 05 D 0007 |
| 06 Y 0066 | 10 M 0616 | 08 E 0265 |
| 10 P 0380 | 06 C 0830 | 02 S 0373 |
| 05 O 0938 | 08 T 0743 | 08 E 0879 |
| 01 K 0138 | 05 R 0315 | 06 X 0448 |
| 09 A 0306 | 06 K 0157 | 10 J 08 4 |
| 09 Q 0628 | 10 J 0524 | 03 S 0410 |
| 07 Q 0204 | 06 T 0751 | 04 B 0927 |
| 01 D 0368 | 08 N 0117 | 03 M 0923 |
| 06 S 0650 | 01 X 0945 | 02 G 0917 |
| 04 H 0034 | 04 F 0591 | 01 S 0554 |
| 07 W 0580 | 03 R 0111 | 01 R 0487 |
| 01 X 0668 | 03 H 0272 | 02 U 0453 |
| 08 N 0297 | 03 N 0613 | 05 O 0285 |
| 04 X 0346 | 09 R 0384 | 07 N 0073 |
| 03 B 0745 | 01 S 0552 | 10 M 0835 |
| 07 F 0192 | 07 Q 0637 | 06 H 0185 |
| 01 K 0194 | 02 R 0072 | 09 G 0536 |
| 01 P 0203 | 03 T 0530 | 06 X 0258 |
| 03 C 0282 | 02 K 0244 | 02 R 0678 |
| 06 O 0793 | 01 P 0428 | 01 E 0526 |
| 06 B 0729 | 03 U 0883 | 03 F 0688 |
| 04 L 0123 | 09 Y 0341 | 02 R 0552 |
| 10 B 0098 | 08 T 0093 | 01 P 0904 |
| 01 D 0924 | 03 S 0919 | 10 N 0583 |
| 07 Z 0464 | 04 A 0168 | |
| 04 B 0638 | 04 B 0293 | |

இலங்கை தேர்தல் பற்றி

## லண்டன்பத்திரிகைகள் கருத்து

லண்டன், வெள்ளி

'இலங்கைத் தேர்தல் முடிவுகளிலிருந்து இலங்கையில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்க முடியுமென்று கூற முடியாது" என்று லண்டன் பத்திரிகையான 'டைம்ஸ்' அதன் தலையங்கத்தில் கூறியுள்ளது.

'இலங்கையிலுள்ள மக்கள் எந்த ஆட்சியை விரும்புகின்றார்கள் என்பதை உணர்த்தி மக்கள், பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யவில்லை" என்று 'இண்டிபெண்டன்ற் டெயிலி' அதன் தலையங்கத்தில் தெரிவித்திருக்கின்றது.

## அரசாங்கத்திற்கு மேலும் ஆதரவு

பம்பலப்பிட்டி, வெள்ளி

அரசாங்கசேவையிலுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட சமஸ்த லங்கா விப்பிருவ சங்கம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவிற்கு கீழ்க்கண்ட தந்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

தந்தியின் விபரம் வருமாறு:

'எங்கள் ஆதரவையும் ஒற்றுமையையும் உங்கள் அரசாங்கத்திற்கு என்றும் நல்குவோம் என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் நல்ல முறையிலும் நம்பிக்கையுள்ள வகையிலும் செய்யும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் எங்கள் ஒத்துழைப்பு என்றும் உண்டு.

## மறுமலர்ச்சி ஏற்படவில்லை

உடுப்பிட்டி, வெள்ளி

"துன்பங்கள் சூழ்ந்த கடந்த கால அரசியல் வரலாற்றின் பின்னர் இப்போதைத் தேர்தலையடுத்துத் தமிழினத்தின் வரலாற்றில் பசுமையான மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்று சகல தமிழ் பேசும் மக்களும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ளுமுகமாகவே தமிழ்ப்பேசும் பொது மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் தமது அரசியல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் எந்தப் பலம் வாய்ந்த சக்திகளுடனாவது தமிழ் எம். பி.க்கள் ஒத்துழைக்கக் கூடாது" என்று நெல்லை தமிழ்க் கனற்கலை மன்றக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. செ. சுவர்ணராஜா பேசுகையில் கூறினர்.

திருவாளர்கள் கா சண்முகானந்தன், கே. அருணையா. க' தங்கத்துரை ஆகியோரும் பேசினர்.

## வாழ்த்து

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரித் தொகுதிக்கு மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. வ. ந. நவரத்தினத்துக்கு தென்மராட்சி இளந்தமிழர் மன்ற கைதடி கிளை வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பியுள்ளது.

## பல்கலைக்கழக நாடகம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி சிவன்கோவில் வாரிவனேஸ்வரத் திருக்குள நிதிக்காக அடுத்த மாதம் 2-ம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினர் ஆதரவில் வடமோடி முறையில் ஆடப்படும் 'இராவணேசன்' என்ற நாடகம் நடைபெறும்.

## மத்தியான உணவு இல்லை

எட்டியாந்தோட்டை, வெள்ளி

எட்டியாந்தோட்டையிலுள்ள 15,000 பிள்ளைகளுக்கு சென்ற புதன்கிழமை மத்திய உணவு வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. இதுகுறித்து பிள்ளைகளின் பெற்றோர் பாடசாலை அதிபர்களுக்கு புகார் செய்துள்ளார்களாம்.

# வியட்நாம்: "அமைதித் தீர்வுகாண எங்கும் எவருடனும் பேசுவேன்"

## அமெரிக்க அதிபர் அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 26

"வியட்நாம் பிரச்னையை அமைதியாகத் தீர்ப்பதற்கு எவருடனும் எந்த இடத்திலும், எந்த நேரமும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராய் இருக்கிறேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் தெரிவித்தார்.

மந்திரிசபைக் கூட்ட முடிவில் திரு. ஜோன்ஸன் நிருபர்களிடம் பேசுகையில், எந்தத் தீர்வுக்கும் வடக்கு வியட்நாம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். என்றார்.

அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக் கொள்ளாவிட்டால் வடக்கு வியட்நாம் மக்களுக்கு உதவியாக நவசீன "தொண்டர்களை" அனுப்பும் என்று சீனா தெரிவித்திருக்க பயமுறுத்தல் பற்றி வாஷிங்டனில் ராஜாங்க இலாகா கருத்துத் தெரிவிக்கையில் சீனப்பயமுறுத்தலால் வியட்நாம் சம்பந்தமான அமெரிக்க கொள்கையில் மாறுதலில்லை என்று தெரிவித்தது.

# சீன-பாக். எல்லை ஒப்பந்தம் கைச்சாத்தானது

ராவல்பிண்டி, மார்ச் 26

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் இன்று ராவல்பிண்டியில் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் சீன உதவிப் பிரதமரும், வெளிவிவகார மந்திரியுமான மார்ஷல் செங் யியும் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப் ஸில்பிகார் அலி புட்டோவும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்பொருட்டு நேற்று இங்கு வந்து சேர்ந்த மார்ஷல் செங் யியுக்கு நேற்றிரவு அளிக்கப்பட்ட ஒரு விருந்துபசாரத்தில் ஜனாப் புட்டோ பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அயல் நாடுகளுடன் நட்புறவுடன் வாழ்வதே பாகிஸ்தானினதும் சீனாவினதும் கொள்கையும் நோக்கமுமாகும். இந்த நோக்கத்தை அயல்நாடுகளுடன் இரு நாடுகளும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களே போதிய சான்றாகும். சீன-பாகிஸ்தான் எல்லை அமைப்பு வேலைகள் இரண்டு வருடகாலத்துக்குள் முடிவடைந்தது குறிப்பிடக்கூடிய பெரும் சாதனையென்றும் ஜனாப் புட்டோ கூறினர்.

## எதிரி விடுதலை

பரந்தன், வெள்ளி

திருடப்பட்ட துப்பாக்கி வைத்திருந்ததாகப் பரந்தனைச் சேர்ந்த சின்னத்துரை என்பவர்மீது கிளிநொச்சி பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி ஹுபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. எம். சிவானந்தன் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, எஸ் பி மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரத்னயக்கர் சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:-

எனக்கு கிடைத்த தகவலின் படி கான்ஸ்டபிள் நடராசாவுடன் ஜீப்பில் சென்றபோது எதிரி துவக்கைத் தோளில் வைத்துக்கொண்டு நடந்து சென்றார். ஜீப்பை நிறுத்திவிட்டு அவரின் பின்னால் நடந்து சென்றோம். அருகில் போனதும் துவக்கை போட்டுவிட்டு எதிரி ஓடினர், அவரை நான் பின் தொடர்ந்து துரத்திப் பிடித்தேன், நடராசா துவக்கை எடுத்தார்.

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, தான் 25 யார் தூரம்வரை துரத்தி எதிரியை பிடித்ததாக இன்ஸ்பெக்டர் கூறினர்.

பொலிஸ கான்ஸ்டபிள் நடராசா குறுக்கு விசாரணையின் போது இன்ஸ்பெக்டர் எதிரியை தன் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் பிடித்து 30 நிமிடங்களுக்குப்பின் கொண்டு வந்ததாகவும் கூறினர்.

எதிரி பக்கத்து சாட்சிகளை அழைக்காமல் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். விடுதலை செய்த காரணத்தை ஏப்ரல் 7 ம் தேதி வெளியிடுவதெனவும் நீதிபதி தெரிவித்தார்.

## இலங்கை-இந்திய ஒப்பந்தம்

புதுடில்லி, மார்ச் 25

இலங்கையில் உள்ள இந்தியவம்சாவளியினர் சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த அமுல் குறித்து, கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த அதிகாரிகள் மகாநாட்டின் முடிவுகளடங்கிய அறிக்கை லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்புக் கொள்ளப்பட்ட நடைமுறையின்படி, இரு அரசாங்கங்களும் சம்பந்தப்பட்ட பட்டியல்கள் தயாரிக்கும் வேலைகளை 1966-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் திகதிக்குள் முடித்துவிட வேண்டும்.

இந்திய வம்சாவளியினரைத் திருப்பியனுப்புவது கூடிய வரையில், இஷ்டபூர்வ அடிப்படையில் இருக்க வேண்டும். எந்த வருஷத்திலாவது குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக்குறைவாலுல் இருதரப்பிலும் பிரஜாவுரிமை சம்பந்தமான ஷரத்தின் நோக்கம் கைகூடும்வகையில் இந்தியர் திருப்பியனுப்பப்பட வேண்டும்,

பொதுவிண்ணப்பங்கள்செய்து பிரஜாவுரிமைக்கு மனுக்கள் கோரி, கூடியவரையில் அவற்றின் அடிப்படையிலேயே பிரஜாவுரிமைகள் வழங்கப்படும். குறிப்பிட்ட அளவு மனுக்கள் வராவிட்டால் இரு அரசாங்கங்களும் தமது ஒப்பந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை காணும்.

## ரபாட்டில் கலகம் 7 பேர் மாண்டனர்

ரபாட், மார்ச் 27

கஸபிளங்காவில் நேற்று நடைபெற்ற ஒரு கலகத்தில் ஏழு பேர் மாண்டனர், பாதுகாவல் படையைச் சேர்ந்த 69 பேர் காயமடைந்தனர்,

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள், பஸ்கள், கார்களுக்குத் தீவைத்து கடைகள், தபால் கந்தோர்கள், பாடசாலைகள் ஆகியவைகளை உடைத்துச் சேதப்படுத்தியும் ரயில்வே நிலையம் ஒன்றை உடைத்தும் அட்டகாசம் புரிந்தனர் என்று அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்தது. 168 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்,

## டட்லிக்கு ராஜாஜி வாழ்த்து

சென்னை, மார்ச் 25

"உங்களுடைய திறமையான சீரிய தலைமையின்கீழ் இலங்கை, தென்னிந்திய மக்களுடன் பழைய நேசத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமென நம்புகிறேன்" என்று இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரியும் சுதந்திராக் கட்சி ஸ்தாபக தலைவருமான ராஜாஜி இலங்கைப் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் ராஜாஜி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

உங்கள் தலைமையின்கீழ் ஆசியா முழுவதையும் அடிமைப்படுத்த முயலும் நாசவேலை ஆபத்துக்கு இலங்கை ஒரு தாவுமிடமாய் இல்லாமல் நவீன உலக தாராளக் கொள்கைகளுக்கேற்ப பலமான அரசாங்கத்தைக் கொண்டதாயிருக்குமென நம்புகிறேன்.

## நாகா கலகக்காரர்கள்

புதுடில்லி, மார்ச் 25

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற சுமார் 1500-க்குமதிகமான நாகா கலகக்காரர்கள் நவீன ஆயுதங்களுடன் நாகாலந்து பர்மா எல்லையில் குவிவதாகவும், நாகாலாந்தில் திரும்ப நுழைவதற்குத் தயாராக இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து, நாகாலாந்து-பர்மா எல்லையில் இந்திய ராணுவத்தினர் உஷாராக உள்ளனர் என்று தெரிகின்றது,

*சிறிமாவோ வீழ்ச்சிபற்றி*

## மலேசியா பத்திரிகை கருத்து

கோலாலம்பூர், மார்ச் 26

கோலாலம்பூரில் மிகவும் பிரபல்யமான "ஸ்ரெயிற் டைம்ஸ்" சிறிமாவோவின் வீழ்ச்சிபற்றி பின்வருமாறு அதன் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது:

"இலங்கை கம்யூனிசத்திற்கு முற்றுப் புள்ளிவைத்து விட்டது. மார்க்ஸியவாதிகளுடன் சேர்ந்த காரணத்தினாலேயே சிறிமாவோவின் சுதந்திரக் கட்சி தோல்வியுற்றது. பீக்கிங் அரசாங்கத்தின் தொடர்புகளும் தேர்தலில் மிகவும் பிரதான விஷயமாக கருதப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை திருமதி பண்டாரநாயகாவின் காலத்தின் நடுநிலைமையில் நின்றும் விலகி மேற்கத்திய நாடுகளுக்கெதிராகவும் கம்யூனிஸ்ட் நாடுகள் சார்பாகவும் சென்று கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மேற்கு நாடுகளின் ஆதரவை கொண்டிருப்பதால் பத்திரிகையின் ஆதரவையும் பெறக் கூடிய நிலையில் இன்று இருக்கின்றது. ஆகவே திரு. டட்லி சேனநாயகா ஒரு சிறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தி மலேசியாவின் நல்லெண்ணத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் பெறுவார் என எதிர்பார்க்கிறேம்".

# யாழ். மாவட்ட பாடசாலை உடற்பயிற்சிபோட்டிமுடிவுகள்

பருத்தித்துறை, வியாழன்

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப்போட்டிகள் இன்று யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றன.

"பி" பிரிவுப் பாடசாலைகட்கான போட்டியில் ஆண்களுக்கான கீழ், மத்திய, மேலபிரிவுகளில் மொத்தம் 24 பாடசாலைகளும் பெண்களுக்கான கீழ், மத்திய, மேல் பிரிவுகளில் 80 பாடசாலைகளும் கலந்துகொண்டன. காலை நடைபெற்ற போட்டிகளில் ஒவ்வோர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட நான்கு கோஷ்டிகட்கிடையே மாலைப்போட்டிகள் இடம்பெற்றன.

போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு: (ஆண்கள்) கரம்பன் ஆர். சி. பாடசாலை, பெரியபுலம் மெ. மி. பாடசாலை, சென் மேரிஸ் யாழ்ப்பாணம்.

மத்தியபிரிவு: புங்குடுதீவு ஆர். சி. பாடசாலை, நாவாந்துறை ஆர். சி. பாடசாலை, மீசாலை வீரசிங்க வித்தியாசாலை.

மேற்பிரிவு: முத்துத்தம்பி வித்தியாசாலை, மீசாலை வீரசிங்க வித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு: (பெண்கள்) அச்சுவேலி சென் திரேசா பாடசாலை, பெரியபுலம் மெதடிஸ்த பாடசாலை, நாவாந்துறை ஆர். சி. பாடசாலை.

மத்தியபிரிவு: அச்சுவேலி சென் திரேசா வித்தியாசாலை, பாஷையூர் ஆர். சி. பாடசாலை, ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பாடசாலை.

மேற்பிரிவு: முத்துத்தம்பி வித்தியாசாலை, அச்சுவேலி சென் திரேசா பாடசாலை, பாஷையூர் ஆர். சி. பாடசாலை.

ஊர்காவற்றுறைப் பகுதி வட்டார வித்தியாதரிசி திரு. எம். ஏ. சீமாம்பிள்ளை இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்ததுடன் மாணவர்களது அணிவகுப்பு மரியாதைகளையும் ஏற்றுக்கொண்டார்.

உடற் பயிற்சிப் போட்டிகளின் நிர்வாகக் காரியதரிசியும் உடற்பயிசித்துறைப் பரிசோதகருமான திருமதி பி. குகதாசன் வெற்றி பெற்ற பாடசாலைகட்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்

ஆங்கில பாடசாலைகளின் போட்டி நாளை நடைபெறுமெனவும் 52 பாடசாலைகள் இதில் வந்துகொள்ளுமெனவும் தெரியவருகிறது.

## அமெரிக்கர் நிம்மதி

வாஷிங்டன், மார்ச் 25

இலங்கையில் பொதுத்தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கம் தோல்வியடைந்தது அமெரிக்கருக்கு நிம்மதியளித்துள்ளது,

சாதாரணமாக நேசநாடுகளின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து அபிப்பிராயம் தெரிவிப்பது அமெரிக்காவுக்கு வழக்கமில்லை. ஆனால் திருமதி பண்டாரநாயக்கா உள்நாட்டுப் பிரச்னைகளைச் சமாளிக்கத் தவறியது, இலங்கை மென்மேலும் பீகிங் பக்கம் சாய்ந்து வருவது ஆகியவை அமெரிக்காவுக்கு மிகவும் கவலையளித்து வந்தது. திருமதி சிறிமாவின் அரசாங்கம் அவசரப்பட்டு எடுத்த தேச உடைமை நடவடிக்கைகள், நிர்வாகச் சீர்குலைவு, அவருடைய ஆதரவாளர்கள் சிலர் கம்யூனிஸ்ட் சீனாவிஷயமாக கொண்டிருந்த போக்கு இவைகளெல்லாம் நீடித்ததால் இலங்கை ஒரு பிரச்னைக்குரிய நாடாகிவிடுமென்பதை ராஜீய அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் கம்யூனிஸஅபாயத்தை பிரத்தியட்ச ரீதியில் மதிப்பிட்டு உள்நாட்டுப் பிரச்னைகளையும் திறம்படச் சமாளிக்குமென்றும் அமெரிக்கர்கள் கருதுகின்றனர்.

## புங்குடுதீவு ஆஸ்பத்திரி

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியும், அவரது உதவி வைத்தியர்களும் நாட்டிற்குச் செய்த சேவைகளைத் பாராட்டி அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக புங்குடுதீவு கிராமசபையில் நிறைவேற்றப்பட்டது. வைத்திய அதிகாரியை வேறு வைத்தியசாலைக்கு மாற்றவேண்டாமென்றும் அவர் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் தொடர்ந்து சேவைசெய்ய வேண்டுமென்றும் புங்குடுதீவு கிராமசபைத தலைவர் மேலதிகாரிகளை வேண்டியிருக்கிறர். தீவுப்பகுதி இந்து மகாசபை, பொதுமக்கள் பலர் வைத்திய அதிகாரியின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்கள்;

## அவசரபிரச்னைகள் பற்றி ஸ்ரீமதி பண்டிட்

புதுடில்லி, மார்ச் 25

"எதிரிலுள்ள மாபெரும் பணியை நிறைவேற்ற உறுதியாகக் கொள்கைகளை நழுவவிடாமல் உழைக்க வேண்டும் நாங்களும் பயபக்தி விசுவாசத்துடன் உங்களைப் பின்பற்றி வருவோம்" என்று ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பட்ஜெட் மீதான பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதம மந்திரிக்கும் அவரது சகாக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் பேசும் போது ரனம் முதல் காஷ்மீர் வரையில் உள்ள அவசரப் பிரச்சனைகள் மந்தப் போக்கில் தீர்க்கப்படாது இருக்தல் வருத்தத்திற்குரிய தென்றும் கூறினர். வரி ஒழிப்போருக்குச் சலுகை காட்டுவது தீங்கானது என்று நிதி மந்திரியைக் கண்டித்தார். கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட பெரும் சூழ்நிலையை பிரதமரும் சகாக்களும் சமாளித்த முறையை அவர் பாராட்டினர்.

## சந்திரமண்டல பிரயாணம்

வாஷிங்டன், மார்ச் 27

1970-ம் ஆண்டுக்குள் சந்திரமண்டலத்தில் மனிதன் கால் வைப்பது சாத்தியமென்றும் சந்திரமண்டலப் பிரயாணத்துக்கு சில தினங்களுக்குமுன் அமெரிக்கா அனுப்பிய ரேஞ்சர்-9 என்ற ராக்கெட் கலபமாக்கியுள்ளதாம். சந்திர மண்டலத்தின் மேற்புறத்தை இந்த ராக்கெட் 200 மைல் தூரத்திலிருந்து படம்பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது,

## அர்ச். சூசையப்பர் திருவிழா

மன்னர், வெள்ளி

மன்னர்ப் பகுதியில் அர்ச். சூசையப்பர் வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் வண கட்டனைக்குரவர் பொனிக்கோவினால் நடாத்தப்பட்டது. பாடற் பூசையிலும், சுற்றுப்பிரகாரத்திலும் ஏராளமான கத்தோலிக்கர் கலந்து கொண்டனர். காவலூர் அர்ச் சூசையப்பர் ஆலயத்திலும் திருநாள் கொண்டாடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

# ‘ஒருவர் தலையில் அடித்தார்; மற்றவர் கத்தியால் குத்தினர்’

## கணேசபுரம் கொலை வழக்கில் சாட்சியம்

கிளிநொச்சி, வெள்ளி

கணேஷபுரம் கொலைவழக்கு கிளிநொச்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆர். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முக்கிய சாட்சியாகக் கருதப்படும் கணபதிப்பிள்ளை தம்பையா தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

1962-ம் ஆண்டு மாசிமாதம் 24-ந் திகதி இரவு 8-00 மணியளவில் நான் மாடுகளை தேடிப்போனபோது காலஞ்சென்றவர் ஓடுவதையும் கண்டேன். 1-ம், 2-ம் எதிரிகள் சைக்கிளில் பின் தொடவதையும் கண்டேன். எதிரிகள் இருவரும் காலஞ் சென்றவரை அமிர்தனுதர் வீட்டுக்கு முன்பாக முதலில் 2-ம் எதிரி தலையில் அடித்ததையும் 1-ம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் குத்தியதையும் காலஞ்சென்றவர் அமிர்தநாதர் வீட்டுக்கேற்றை திறந்து கொண்டு ஓடியதையும் கண்டேன். பின் எதிரிகள் இருவரும் தங்கள் வீட்டுப்பக்கமாகச் சென்றனர்.

நான் இவ்விஷயத்தை எவரிடமும் சொல்லவில்லை. எனது சகோதரர் வீடு அமிர்தநாதர் வீட்டுக்கு அருகாமையில் உள்ளது நான் இவ்விஷயத்தை அவரிடமும் சொல்லவில்லை. இதை பொலிசாரிடமும் சொல்லவில்லை. காரணம் காலஞ் சென்றவரும் எதிரிகள் இருவரும் எனது கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வழக்கில் கிளிநொச்சி கணேஷபுரத்தைச் சேர்ந்த இராசன் யாக்கோப்பு என்பவரை அதே ஊரைச் சேர்ந்த எஸ். தியாகராசா, வி. கறுப்பையா என்பவர்கள் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. எதிரிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## “பராமரிப்பு அதிகாரிகளுக்கு நீதியரசர் பாராட்டு

கொழும்பு, வெள்ளி


“சிறை பராமரிப்பு அதிகாரிகள் மக்கள் சமுதாயத்திலே ஒரு பிரதான அம்சம் என்பதை நான் உணர்திருக்கின்றேன். அவர்களுடைய பொறுப்பு மிகவும் இலகுவான தொன்றல்ல. நேர்மையான பாதையில் நின்றும் கெடுதியான குற்றங்களும் பழிச் செயல்களும் நிறைந்த பாதையில் செல்லும் அபபேர்ப்பட்டவர்களை பராமரிப்பு அதிகாரிகள்தான் திருத்தி நல்ல வழிக்குகொண்டு செல்கின்றார்கள். நிரூபிக்கப்பட்ட ஒரு வழக்கிலோ அல்லது குற்றத்தை ஏற்றுக்கொண்ட ஒரு தண்டனை கொடுக்கப்பட்டால் அது ஒருவரின் வாழ்வை பெரிதும் பாதிக்கின்றது” என்று அசைஸ்கமிஷனர் திரு. இ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி, 22 வயதுடைய கோவாசகம் குலரத்தினு என்பவர் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் திகதி ஏச். ஏ. அயுப்பாலி என்றபெண்ணை கொலை செய்ததாக குற்றஞ் சாட்டி தொடரப்பட்ட வழககில் எதிரியை கல்கட்டத்தையில் போகும்படி தீர்ப்பு வழங்குகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் நீதியரசர் குறிப்பிட்டதாவது “பராமரிப்பு இலாகாவில் உண்மையுடனும் திறமையுடனும் கடமையாற்றக்கூடிய உத்தியோகத்தாகளிலேயே நீதியரசர்களின் வெற்றி தங்கியிருக்கின்றது.”


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

**சவரின் வளையல்கள்**

உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்க நகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவஅமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ,அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 6-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ 18-50.

**ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி**

12, யட்டிநுவர வீதி, கண்டி.



குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

**நேத்திராலோகதைலம்**

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவைவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

**தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.**

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

**டப்ளியூ. கே. ஜினதாஸ,**

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.

எனக்கு மிகவும் பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

**கன்டொஸ்**

*உயர்ந்த ரகச் சொக்கலேற்று*




ஏகவிநியோகஸ்தர்கள்:

**ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,**

கொழும்பு - 3.

RAVI-CCL-116

## பனை சீனி ஆலை

சென்னை, மார்ச் 27

மாதவரம்பால் பண்ணை அருகில் குமரப்பாபுரத்தில் பனைச் சீனி ஆலையை முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் திறந்துவைத்தார்.

—

## ஒருவர் தனியில்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் வழக்கறிஞர் எஸ். சண்முகநாதன் சி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி சார்பில் கிளிநொச்சி பொலிஸ இன்ஸ்பெக்டர் வழக்கை நடத்தினர்.

மேல்விசாரணையை இம்மாதம் 31-ம் திகதி சாவகச்சேரிச் மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு ஒத்திபோடப்பட்டது.

## காசநோய் பற்றி மகாநாடு

பம்பலப்பிட்டி, வெள்ளி

இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் உலக காசநோய் மகாநாட்டில் 800 டாக்டர்கள் கலந்து கொள்வார்களெனத் தெரியவருகிறது. இம்மாநாடு காசநோய்க்கு எவ்வாறு பரிகாரம் செய்யவேண்டுமென்பது பற்றியும் காசநோய் தடுப்பு முறை பற்றியும் ஆராயும் இலங்கையின் பிரதிநிதியாக டாக்டர் ஜே. ஆர். வில்சன் அந்த மகாநாட்டில் பங்குபற்றுகின்ருர்

86 தேசங்களிலுள்ள பிரதிநிதிகள் காசநோய் விஷயம் பற்றி நான்கு நாட்கள் கருத்து பரிமாறி நீண்ட ஆராய்ச்சிகளை நடத்துவர். இது போன்ற மகாநாடுகள் நாலு வருடத்திற்கு ஒருமுறை நடை

பெறுவது வழக்கம் 1962-ம் ஆண்டில் தான் கடைசியாக [illegible]

## கிளிநொச்சியில் திருக்குறள் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் மன்றக் கழகம் வருடந்தோறும் நடாத்தும் திருக்குறள் மகாநாடு இம்முறை கிளிநொச்சியில் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் என்று தமிழ் மறைக் கழகத் தலைவரும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. க. பொ. இரத்தினம் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

சிறப்பாக நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் பல அறிஞர்களின் கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனவும் தெரிய வருகிறது.

## நோயாளிகள் துள்ளிக்குதித்தனர்

அனுராதபுரம், வெள்ளி

கூட்டரசாங்கம் ராஜினாமா செய்துவிட்டதென்றும் திரு. டட்லி சேனநாயகா அரசாங்கத்தை அமைக்கப் போகின்ருர் என்ற செய்தி இங்கேயுள்ள மக்களுக்கு பெரும் சந்தோஷத்தை கொடுத்தது, மக்கள் வெடிகள் கொளுத்தியும் பச்சை கொடிகளை பிடித்தும் ஆரவாரித்தனர். ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் தங்கள் படுக்கைகளில் நின்றும் துள்ளி குதித்தனராம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்!


## வரி விளம்பரம்

**தேவை**

எமது ஸ்தாபனத்தில் தைவேலை செய்ய நன்கு தெரிந்த பெண்மணிகள் உடன் தேவை. தங்குபவர்களுக்கு போடிங் வசதிகளும் உண்டு.

அன்னம்ஸ் சாறி வேக்ஸ், 27, பவர்ஹவுஸ்ரோட், விக்னேஸ்வரா மேல்மாடி, யாழ்ப்பாணம். 1830

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலவசம் தொய்வுக்கு 10 நாள் மருந்து 13-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


## முன்னுள் மந்திரிகள் நன்றி

பம்பலப்பிட்டி, வெள்ளி

கூட்டரசாங்க முன்னுள் மந்திரிகள் நேற்று காரியாலயங்களுக்குச் சென்று தங்களுடன் கடமையாற்றிய உத்தியோகஸ்தர்களுக்கு பிரியாவிடை கூறினர்.

முன்னுள் மந்திரிகளான திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயகா, சம்பி குணவர்த்தன, டாக்டர் என். எம். பெரேரா தங்கள் அலுவலகங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

—

## டெயிலிநியூஸ் முன்னுள் ஆசிரியர் மரணம்

லண்டன், மார்ச் 27

ஆங்கிலத் தினசரிகளான 'டெயிலி நியூஸ்' 'சிலோன் ஒப்சேவர்' ஆகிய இரு பத்திரிகைகளுக்கும் முன்னுள் ஆசிரியராயிருந்த திரு. எம். எம். பிறவுன் நேற்று காலமானர்.

1957-ம் ஆண்டு பத்திரிகைப் பதவியைவிட்டபின்னர் லண்டன் சென்ற திரு பிறவுன் லண்டனில் 'அஸோசியேட்டட் பத்திரிகைகளின்' ஆசிரியராக சிலகாலம் கடமையாற்றினர்.





அருந்துக

# நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்



★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது.

★ 8 சர்வதேச பரிசுகளை சுவீகரித்தது.

★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது. தெரிவதற்கு பில்ஸ்னர், ஏல், லாகர்.

சிலோன் புருவெரி லிமிட்டெட்



சுகவீனத்தின்போது

புத்துணர்ச்சி நல்க வல்லது

## பார்லியும் ஆர் ஒடிக் கோலான்

காய்ச்சல் குணமுள்ள புருஷத்திற்கு இதமளித்து சுக வித்திரையைத் தூண்டுகின்றது.

கைவசம் ஒரு போத்தலை வைத்திருங்கள்.

# சென்ஜோன்ஸ் - சென்ரல் கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், சனி

கடந்த பல வருடங்களாக நடைபெற்ற இந்த ருசிகரமான போட்டி நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறுகிறது. 67-வது முறையாக சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்குமிடையில் இன்றும் நாளையும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியே இது.

**சென். ஜோன்ஸ் கோஷ்டி**

பி. கனகதுரை (கப்டன்)
எம். தெய்வேந்திரா
ஜே. வயிரவப்பிள்ளை
எஸ். எம். மூத்ததம்பி
இ. சூரியகுமார்
கியூ. ரட்னம்
சி. விபுலானந்தா
எஸ். சிவகுமார்
எம். நரேந்திரா
எஸ். எஸ். ஜெயநாயகம்
டி. ஜே. ஞானக்கோன்
சி. கந்தகுமார்
எஸ். சுகுமார்
பி. இராஜதுரை

**யாழ். மத்திய கல்லூரி கோஷ்டி**

கே. டி. கணேஷ்குமார் (கப்டன்)
வி. அம்பலவாணர்
ஆர். சச்சிதானந்தன்
ஏ. பற்குணராஜா
சி. நடராசா
எம். சிறி. தாமோதரன்
ஆர். மனோகரன்
கே. சண்முகலிங்கம்
டி. இந்திரகுமார்
வி. கங்காதரன்
பி. தம்பையா
எஸ். சிவசோதி
சி. பேரின்பநாதன்
கே. குகனேசராஜா

இந்த இரண்டு கல்லூரிகளும் இந்தச் 'சீனி'ல் ஏழு ஆட்டங்களில் பங்கு பற்றியிருக்கின்றன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எல்லா ஆட்டங்களிலும் வெற்றியீட்டியது. ஆனால் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆறு ஆட்டங்களில் வெற்றியீட்டி ஒரு ஆட்டத்தில் வெற்றி தோல்வியற்ற நிலையை ஏற்படுத்தியது.

# திருமண அழைப்பு

**கணபதிப்பிள்ளை - தவமணிதேவி**

இணுவில் திரு. திருமதி ந. செல்லையாவின் மகன் திரு கணபதிப்பிள்ளை (ஆசிரியர், பரி யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், எலாய் திரு. திருமதி வீ. கணபதிப்பிள்ளையின் மகள் செல்வி தவமணிதேவிக்கும் இறை 27-3-65 சனிக்கிழமை காலை 6-45 மணிக்கு வலம்புரிப் பிள்ளையார் கோயிலில் திருமணம் நடைபெறும். சகல நண்பர்களும், உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

1827

**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Beauties of Night World!
**SEXY FOLLIES**
(Totalscope - Eastmancolor)
(ADULTS ONLY)

புதுடில்லி, மார்ச் 5

கேரளாவில் தேர்ந்தெடுக்கப்பட்டும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கைதிகளை விடுதலை செய்யும் விஷயத்தை அவர்களால் தேச பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாது என்று சர்க்காருக்கு திருப்தி ஏற்படும் போதுதான் பரிசீலிக்க முடியும் என்று உள்துறை இலாகா துணை மந்திரி ஸ்ரீ ஜே. எல். ஹாத்தி இன்று லோக சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

இந்தியப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்படாதபடி தடுப்பதற்காகவே, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தீவிர அங்கத்தினர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பது இந்தக் காரணங்களை எந்த வகையிலும் பாதிக்கவில்லை என்றும் மந்திரி சொன்னார். குடும்பப்படி அளிக்குமாறு கோரி இந்தக் காவல் கைதிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு ஒரு மகஜர் வந்திருக்கிறது. இது அரசாங்க பரிசீலனையில் இருந்து வருகிறது என்றார் மந்திரி.

கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
பிளாஸா (வெள்ளவத்தை)
விஜிதா (ஹட்டன்)
தீவொளி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)
ராஜா தேசிங்கு

# திருமதி விஜேசிங்ஹா மீதுள்ள புகார் நிரூபிக்கப்படவில்லை

புதுடில்லி, மார்ச் 25

மாஜி உதவி மந்திரி ஸ்ரீமதி தாரா கேசவரி விஜேசிங்ஹா மீது கூறப்பட்ட புகார்கள் நிரூபணமாகவில்லை.

ஸ்ரீமதி விஜேசிங்ஹா பதவியிலிருந்த போது அவருடைய கணவரும் தாயாரும் வீடுகள் வாங்கியது சம்பந்தமானது பிரதான குற்றச்சாட்டு. வீடுகள் வாங்கியது சம்பந்தமான விவரங்கள் சர்க்காரிடம் விளக்கிக் கூறப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று உள்துறை மந்திரி ஸ்ரீ நந்தா இன்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அவர் வகித்த சர்க்காருக்குச் சொந்தமான ஜாகைக்கு சிறிய ரிப்பேர்கள் செய்தது, அந்த வீட்டில் குளிர்சாதனங்களை அமைத்தது ஆகிய பற்றியவை மற்ற குற்றச்சாட்டுகள். இந்த வசதிகளைச் செய்து கொடுத்தவர்களுக்கு ஸ்ரீமதி விஜேசிங்ஹா அனுகூலம் செய்து இது அதிகார துஷ்பிரயோகம் செய்யவில்லை என்று விசாரணையில் நிரூபணமாகிவிட்டதால் இவ்விஷயத்தில் மேற்கொண்டு எதுவும் செய்வதில்லையென்று சர்க்கார் முடிவு செய்துள்ளதென்றும் ஸ்ரீ நந்தா சொன்னார்.

விசாரணை முடிவுகளை வெளியிடுவதில் சர்க்கார் ரொம்ப காலதாமதம் செய்கிறதென்று ஸ்ரீமதி விஜேசிங்ஹா பாடலுவில் கூறியதைச் சில மெம்பர்கள் சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அந்த அறிக்கையைத் தாம் பார்த்ததாக ஸ்ரீ நந்தா சொன்னார்.

# யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப் பத்திர அறிவித்தல்

1. குருநகர் வீட்டமைப்புத் திட்ட குடிமனைக்கூடங்களில் உள்ள அசுத்தத்தை அப்புறப்படுத்துவதற்கு முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடன் கூடிய கேள்விப்பத்திரங்கள் 7-4-65ம் திகதி பி. ப. 3-00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் 5-4-65-ஆம் திகதி பி. ப. 3-00 மணிவரை மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து ரூபா 5-00 கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாகவும், ரூபா 50-00 கேள்விப் பிணைப்பணமாகவும் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தின் பெறுமதியான ரூபா 5-00 திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் மாநகர சபையுடன் வேலைப்பொறுப்பேற்றதை ஏற்று உடன்படிக்கை எழுதிய பின்பு கேள்விப்பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியில் பங்கு கொள்வோர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர். 1-ம் பந்தியில் குறிப்பிட்ட நேரத்தில் மாநகரசபை ஆணையாளரது அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

4. மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து தேவையான மற்றும் விபரங்களைக் கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்: ஏ. எச். ஏ. சமி
ஆணையாளர்
யாழ்ப்பாண மாநகரசபை

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
22-3-65.

1700

**தேவை**

ஓட்டல் வேலைகளில் அநுபவம் உள்ள சப்பிளையர்கள் பலகாரம் செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும். லேக் வியூ ஹோட்டல், யாழ்ப்பாணம்.

# 14 தமிழரசு எம். பி.க்களும் மந்திரிப் பதவி ஏற்க மறுப்பு

தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். திருச்செல்வம் ஐ. தே. கட்சியின் தேசிய மந்திரி சபையில் ஸ்தல ஸ்தாபன மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார். இன்று இதர மந்திரிகளுடனும் ராணிமாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 14 தமிழரசுக்கட்சி எம். பிக்களில் ஒருவராவது மந்திரிப் பதவியை ஏற்க மறுத்துவிட்டனர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இதற்கு திரு. டட்லி சேனநாயகாவிடம் தெரிவிக்கையில் "எமது உரிமைகளைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறோமே யன்றி நாம் மந்திரிப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இங்கு அனுப்பப்படவில்லை" என திரு. செல்வநாயகம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் கட்டாயம் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் மந்திரிசபையில் அங்கத்துவம் வகிக்க வேண்டுமென்றும் அப்படியில்லைவிட்டால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென்று கட்சியின் ஆதரவாளர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்துதான் திரு எம். திருச்செல்வத்தை மந்திரிப் பதவி ஏற்பதற்கு சிபார்சு செய்ததாகவும் அறியப்படுகிறது.

திரு திருச்செல்வம் செனட்டராக தெரிவுசெய்யப்பட்டு மந்திரி பதவியை ஏற்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்திலும் நியமன அங்கத்தவர்களில் ஒருவராக சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழரசுக் கட்சியின் சார்பில் நியமனம் பெறக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட மந்திரி பதவிகளில் சில மாற்றங்களை செய்வதற்கும் ஆலோசனைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் கடைசியாக கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

# புகழ் பெற்ற விமானங்கள்

மூனிச் மார்ச் 25

பறவையைக் கண்டு விமானம் படைத்த ரைட் சகோதரர்கள் காலம் முதல் இன்று வரை தயாரித்துள்ள பல்வேறு வகை விமானங்களைச் சேர்த்து மேற்குஜெர்மனியிலுள்ள மூனிச் நகரில் ஒரு பொருட்காட்சிசாலை அமைத்திருக்கிறார்கள். ரைட் சகோதரர்கள் பயன்படுத்திய விமானத்தின் மாதிரி முதல் உலகில் முதலாவது தயாரிக்கப்பட்ட ராக்கெட் விமானம் வரை எல்லா விமானங்களும் இங்கு உள்ளன. உலகவிமானப் போக்குவரத்து வளர்ந்த வரலாற்றைச் சித்தரிக்கும் முக்கிய கேந்திரமாக இந்தப் பொருட்காட்சி அமைந்துள்ளது.

உலக விமானப் போக்குவரத்தின் 60 ஆண்டு வரலாற்றை கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் வகையில் மேற்கு ஜெர்மனியில் உள்ள மூனிச் நகரில் ஒரு பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பகாலத்தில் தயாரிக்கப்பட்ட விமானங்களும், இன்று நவீன முறையில் தயாரான விமானங்களும் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. பழைய விமானங்கள் உலகில் எங்கு கிடைத்தனவோ அங்கிருந்து விலைக்கு வாங்கி வந்து இங்கு சேர்த்துவைத்திருக்கிறார்கள். கிடைக்காத விமானங்களின் மாதிரிகளை அப்படியே உருவாக்கி இங்கு வைத்திருக்கிறார்கள். உலகிலேயே முதன் முறையாகத் தயாரிக்கப்பட்ட ராக்கெட் விமானம் ("மி. 163") இங்குள்ள மிக அரிய காட்சிப் பொருள்களில் ஒன்று. 1945-ல் நேசநாடுகள் ஜெர்மனியைப் பிடித்தபோது 10 ராக்கெட் விமானங்களை கைப்பற்றினார்கள். இவற்றில் இரண்டு அமெரிக்காவுக்கும், இரண்டு கனடாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கு ஒன்றும், தென்னாபிரிக்காவுக்கு ஒன்றும் அனுப்பப்பட்டன. பிரிட்டன் நான்கு விமானங்களைப் பெற்றுக்கொண்டது. இந்த நான்கில் ஒன்றை சமீபத்தில் மூனிச் விமானக் கண்காட்சிக்கு பிரிட்டன் நன்கொடையாக வழங்கியுள்ளது.

"மி-163" மாதிரி விமானங்கள் மொத்தம் 364 தயாரிக்கப்பட்டன. உலகிலேயே ஒலியிலும் அதிவேகம் செல்லும் வகையில் உருவாக்கப்பட்ட முதல் விமானம் இதுதான். 1941-ல் இந்த விமானத்தில் 800 மைல் வேகத்தில் பறந்த ஹெய்னி டிட்மர் என்ற ஜெர்மன் விமானி பெருஞ்சாதனையைச் செய்து காட்டினார். அதிக உயரம் பறப்பதிலும் இந்த விமானம்தான் ஒரு சாதனையை ஏற்படுத்தியது. மூன்று நிமிடத்தில் இவ்விமானம் 36,000 அடி உயரத்தை எட்டியது. இந்த விமானத்தால் 45,000 அடி உயரத்தை எட்ட முடியும். எனினும் அந்த உயரத்தில் 15 நிமிடத்திற்குமேல் பறக்க இயலாது. இதனால், இதற்கு இராணுவத்தில் உரிய மதிப்பு கிடைக்கவில்லை.

# தேர்தல் முடிவால் நேர்ந்த கதி

பப்பலப்பிட்டி, வியாழன்

சென்ற திங்கட்கிழமை இரவு 10-45 தொடக்கம் புதன் கிழமை அதிகாலைவரை 15 வயது சிறுவன் உட்பட 8 நபர்கள் கொழும்பு ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெற்றி பெற்றவர்களின் ஆதரவாளர்கள் வெடிகொளுத்திய போதே இவர்கள் காயத்துக்குள்ளானார்கள்.

# ஆசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மே மாதம் நடைபெறும் ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கான நடவடிக்கைகளில் கல்வி இலாகா ஈடுபட்டுள்ளது. ஆசிரியர்களுடைய சேவை புள்ளி விபரங்கள் சேகரிப்பதில் கல்விப் பகுதி அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கல்விப் பகுதி கல்லூரி அதிபர்களுக்கும் பாடசாலை தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் ஆசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணைகள் பற்றிய விபரங்களுடன் அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்:

ஆசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணைகளைப் பொறுத்தே மே மாதத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் நடைபெறும்.

மே மாதத்தில் தென்னிலங்கையில் இருந்தும் வட இலங்கையிலிருந்தும் பெருந்தொகையான ஆசிரியர்கள் இடமாற்றஞ் செய்யப்படவிருக்கின்றார்கள்.

# மேயர் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண பழைய பஸ் நிலையத்தைச் சுவீகரிப்பது பற்றி வெளியான உத்தரவுக்கு யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். சி. மகாதேவா ஆட்சேபனை தெரிவிக்கப்படவேண்டிய கடைசித் தினம் நேற்றாகும்.

இப்பகுதியில் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகளில் சில நேற்றைய சில பதிப்புகளில் வெளிவந்தவை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.